**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் நடத்தப்படும் மேற்சான்றிதழ் கல்வி நிலை-1, நிலை-2 மற்றும் நிலை-3-க்கான (7-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை) பாடத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (கஆப) துறை**

அரசாணை (நிலை) எண்.28

நாள் 06.02.2023
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம், தை - 23

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.300, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20.12.2007.
2. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.046086/பிடி2/இ2/2018, நாள் 28.02.2018, 18.07.2018, 26.11.2018, 04.10.2021, 28.02.2022 மற்றும் 29.11.2022.

****

**ஆணை:-**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் சான்றிதழ் கல்விக்குரிய (1-ஆம் வகுப்பு முதல் 6-ஆம் வகுப்பு வரை) பாடத்திட்டம் மற்றும் இணையவழி பாடங்களுக்கு அங்கீகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மேற்சான்றிதழ் கல்வி நிலை-1, நிலை 2 மற்றும் நிலை 3-க்கான (7-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை) தமிழ் பாடத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன

(த.பி.பா)

இயக்குநரிடமிருந்து பரிந்துரை செய்து பெறப்பட்ட மேலாண்மை ஆய்வுக் குழுவின் அறிக்கையின் மீது தமிழ் இணையக் கல்விக் கழகம் கீழ்க்கண்டவாறு குறிப்புரை வழங்கியுள்ளதாக பள்ளிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

❖ மாநிலக் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மேலாண்மை ஆய்வுக் குழு தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மேற்சான்றிதழ் கல்வி நிலை-1, 2, 3-க்கான பாடத்திட்டம் அயலகத்தில் உள்ள மாணவர்கள் இணையம் வழி கற்க ஏற்றவாறு கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்ததுடன், சில பரிந்துரைகளையும் வழங்கியுள்ளது.

❖ தற்போது தமிழ்ப் பரப்புரைக் கழகத்தின் மூலம் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியாக தமிழ் மொழியைக் கற்கும் அயலகத் தமிழ் மாணவர்களுக்கு ஏற்றவாறு பாடத்திட்டம் மாற்றியமைத்து, பாடங்கள் எழுதும் பணி நடைபெற்று வருகின்றன.

❖ மேற்படி பணியில் மேலாண்மை ஆய்வுக் குழு பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, பாடத்திட்டங்கள் வடிவமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ இப்புதிய பாடத்திட்டம் அடுத்த ஆண்டு முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் பாடத்திட்டம் அயலகத்தில் உள்ள மாணவர்கள் இணையம் வழியில் தமிழ் கற்க ஏற்றவாறு கட்டமைக்கப்பட்டுள்ளன என்று மாநிலக் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் மதிப்பீட்டு மேலாண்மை ஆய்வுக் குழுவின் கருத்திற்கிணங்கவும், மேலாண்மைக்குழு அளித்துள்ள அறிக்கையின் மீது தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் குறிப்பின் அடிப்படையிலும், தற்போதைய பாடத்திட்டத்தில் ஏராளமாக மாணவர்கள் பயின்று வருவதால் அம்மாணவர்களின் தமிழ் மொழி கற்கும் திறனையும், ஆர்வத்தையும் ஊக்குவிக்கும் வண்ணமாகவும், மாணவர்கள் மேற்படிப்பை தொடர்வதற்கேதுவாக தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மேற்சான்றிதழ் கல்வியின் நிலை-1, நிலை-2 மற்றும் நிலை-3-க்கு இணைப்பில் உள்ள (7-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை) பாடத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

3. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று, தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் பாடத்திட்டம் அயலகத்தில் உள்ள மாணவர்கள் இணையம் வழியில் தமிழ் கற்க ஏற்றவாறு கட்டமைக்கப்பட்டுள்ளன என்ற மாநிலக் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் மதிப்பீட்டு மேலாண்மை ஆய்வுக் குழுவின் விரிவான அறிக்கையின் மீது தமிழ் இணையக் கல்விக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட குறிப்பின் அடிப்படையிலும், தற்போதைய பாடத்திட்டத்தில் ஏராளமான மாணவர்கள் பயின்று வருவதால்

அம்மாணவர்களின் தமிழ் மொழி கற்கும் திறனையும், ஆர்வத்தையும் ஊக்குவிக்கும் வண்ணமாகவும், மாணவர்கள் மேற்படிப்பை தொடர்வதற்கேதுவாகவும், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மேற்சான்றிதழ் கல்வி நிலை-1, நிலை-2 மற்றும் நிலை-3-க்கு இணைப்பில் உள்ள (7-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்புவரை) பாடத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6.
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராயச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6.
தமிழ் இணையக் கல்விக் கழகம், கோட்டூர், சென்னை-25.
**நகல்**
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.28, பள்ளிக் கல்வித்(ERT)துறை, நாள் 06.02.2023**

தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மேற்சான்றிதழ் கல்விக்கான (நிலை-1, (7, 8 வகுப்புகள்), நிலை-2 (9, 10 வகுப்புகள்) தமிழ்ப் பாடத்திட்ட வரைவு, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் 7, 8, 9, 10 ஆகிய வகுப்புகளுக்குரிய தமிழ்ப் பாடத்திட்ட வரைவுடன் பின்வருமாறு ஒப்பிடப்பட்டுள்ளன:-

**7, 8 வகுப்புகள் – தமிழ்ப் பாடத்திட்ட ஒப்பீடு**

| தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மேற்சான்றிதழ்க் கல்வி – நிலை – 1 (7, 8 வகுப்புகள்) தமிழ்ப் பாடத்திட்டம் | தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையின் தமிழ்ப்பாடத்திட்டம் (7, 8 வகுப்புகள்) |
|---|---|
| செய்யுள் பகுதி | |
| வாழ்த்து, நீதி, பக்தி, பல்சுவை, மறுமலர்ச்சி, நெடுங்கவிதை என்ற வரிசையில் செய்யுள் / பாடல் / கவிதை இடம் பெற்றுள்ளன. | பொருண்மை அடிப்படையில் ஒவ்வோர் இயலிலும் ஒன்று அல்லது இரண்டு பாடல் / செய்யுள் / கவிதை / கதைப்பாடல் / நாட்டுப்புறப்பாடல் ஆகியவை வாழ்த்து, நீதி, பக்தி, பல்சுவை, மறுமலர்ச்சி ஆகிய பகுப்புகளில் இடம் பெற்றுள்ளன. |
| உரைநடைப்பகுதி | |
| உரைப்பகுதி, கதை (நகைச்சுவை), தன்வரலாறு, கடிதம், கட்டுரை (ஆளுமை), நாடகம் ஆகிய வடிவங்களில் உரைநடைப்பகுதிகள் உள்ளன. | உரைப்பகுதி, கதை, கட்டுரை (ஆளுமை), நேர்காணல், உரையாடல், சொற்பொழிவு ஆகிய வடிவங்களில் உரைநடைப்பகுதி கொடுக்கப்பட்டுள்ளது. |

| இலக்கணப்பகுதி | |
|---|---|
| எழுத்து – அறிமுகம்<br>சொல் – அமைப்பு, பொருள், பொது இயல்பு, பெயர்ச் சொல், வேற்றுமை, ஆகுபெயர் (6) இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர், வினைச்சொற்கள், திணை, பால், எண், இடம், காலம்<br>புணர்ச்சி – புணர்ச்சி முறைகள்<br>யாப்பு – யாப்பிலக்கணம் அறிமுகம்<br>அணி – அணியிலக்கணம் அறிமுகம் | எழுத்து – சார்பெழுத்து – குற்றியலுகரம் முதல் ஆய்தக் குறுக்கம் வரை<br>சொல் – பகுபதம், பகாப்பதம்<br>ஓரெழுத்து ஒருமொழி<br>மூவகைப்போலி<br>இலக்கியவகைச் சொற்கள்<br>தொழிற்பெயர், வினையாலணையும் பெயர், ஆகுபெயர், வேற்றுமை, தொகைநிலை, தொகாநிலை, தொழிற்பெயர், ஆக்க விகுதிகள் குறித்த இலக்கணப்பகுதிகள்<br>வினைச்சொல் – வினைமுற்று, எச்சம் ஆகியவற்றின் வகைகள்<br>வழக்கு – இயல்பு, தகுதி<br>புணர்ச்சி – இயல்பு, விகாரம்<br>யாப்பு – எழுத்து, அசை, சீர், அடி, பா வகை அறிமுகம்<br>அணி – உருவகம், ஏகதேச உருவகம், தற்குறிப்பேற்றம், பிறிதுமொழிதல், இரட்டுறமொழிதல் |
| **துணைப்பாடப்பகுதி** | |
| துணைப்பாடம் என்ற தலைப்பில் தனியாக ஒரு பாடப்பகுதி, பாடத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. | விரிவானம் என்ற தலைப்பில், துணைப்பாடப்பகுதிகள் அமைந்துள்ளன. அவை கதை, கட்டுரை, உரையாடல், படக்கதை, நேர்காணல் ஆகிய வடிவங்களில் இடம்பெற்றுள்ளன. |

**<u>9, 10 வகுப்புகள் – தமிழ்ப்பாடத்திட்ட ஒப்பீடு</u>**

| | |
|---|---|
| தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மேற்சான்றிதழ்க் கல்வி – நிலை – 2 (9, 10 வகுப்புகள்) தமிழ்ப் பாடத்திட்டம் | தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையின் தமிழ்ப்பாடத்திட்டம் (9, 10 வகுப்புகள்) |

| செய்யுள் பகுதி | |
|---|---|
| வாழ்த்து, அறம், காப்பியம், சிற்றிலக்கியம், இக்கால இலக்கியம், சமய இலக்கியம் என்ற வரிசையில் செய்யுள் / பாடல் / கவிதை இடம் பெற்றுள்ளன. | பொருண்மை அடிப்படையில் ஒவ்வோர் இயலிலும் ஒன்று அல்லது இரண்டு பாடல் / செய்யுள் / கவிதை / வாழ்த்து, அறம் காப்பியம், சிற்றிலக்கியம், இக்கால இலக்கியம், சமய இலக்கியம் அயலக மொழிபெயர்ப்பு ஆகிய பகுப்புகளில் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியம் முதல் வாழும் கவிஞர்களின் படைப்புகள்வரை இடம் பெற்றுள்ளன. |
| உரைநடைப்பகுதி | |
| உரைப்பகுதி, கதை (கற்பனை) தன்வரலாறு, நாட்குறிப்பு, கட்டுரை (ஆளுமை), நாடகம் ஆகிய வடிவங்களில் உரைநடைப்பகுதிகள் உள்ளன. | இயல் அமைப்பிற்கேற்ப, பொருண்மை அடிப்படையில், ஒன்பது உரைநடைப்பகுதிகள் இடம்பெற்றுள்ளன. உரைப்பகுதி, பட்டிமன்றம், வில்லுப்பாட்டு, கட்டுரை (இணையம், இராணுவம், மின்னணுத் தொழில்நுட்பம், மொழிபெயர்ப்பு, நிகழ்கலைகள் ஆகிய வடிவங்களில் உரைநடைப்பகுதி கொடுக்கப்பட்டுள்ளது |
| இலக்கணப்பகுதி | |
| எழுத்து - சார்பெழுத்துகளின் வகைகள், பெயர்ச்சொல், வினைச்சொல் இலக்கணம் | எழுத்து – சார்பெழுத்து – உயிரளபெடை, ஒற்றளபெடை |

| | |
|---|---|
| கூறுதல் புணர்ச்சி அமைப்புகள் செய்யுள் உறுப்புகள், செய்யுள் வகைகள், அணிநலன்கள் குறித்த இலக்கணம், அகப்பொருள், புறப்பொருள் குறித்த இலக்கணம் | இடைச்சொல், உரிச்சொல் மூவகை மொழி தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்கள் ஆகுபெயர் (13) தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள், இருதிணை, ஐம்பால் மூவிடம் வழு, வழாநிலை, வழுவமைதி வினா, விடை வகைள் பொருள்கோள் (ஆற்றுநீர், நிரல்நிறை, கொண்டுகூட்டு) துணைவினைகள் பொருள் - அகம் (முதல், கருப்பொருள்கள்) புறம் - 12 திணை புணர்ச்சி – இயல்பு, விகாரம், உயிரீறு, குற்றியலுகரப் புணர்ச்சி மெய்மயக்கம் யாப்பு – எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை பாவகை (4) ஓசை, அலகிடுதல் அணி - உவமை, உருவகம், பின்வருநிலையணி, வஞ்சப்புகழ்ச்சி, தற்குறிப்பேற்றம், தீவகம், நிரல்நிறை, தன்மை ஆகிய அணிகள் பயிற்சி - வலிமிகுமிடம், மிகா இடம் |
| துணைப்பாடப்பகுதி | |
| துணைப்பாடம் என்ற தலைப்பில் தனியாக ஒரு பாடப்பகுதி, | விரிவானம் என்ற தலைப்பில், |

| | |
|---|---|
| பாடத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. | துணைப்பாடப்பகுதிகள் அமைந்துள்ளன. அவை கதை, கட்டுரை, உரையாடல், பட்டிமன்றம், கடிதம், பாத்திரமேற்றுப் பேசுதல், நாடகம், நேர்காணல் ஆகிய வடிவங்களில் இடம்பெற்றுள்ளன. |

**<u>தமிழ் இணையக் கல்விக் கழக மேற்சான்றிதழ் நிலை – 3 பாடத்திட்டம் சார்ந்த கருத்துகள்</u>**

(i) தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் பாடத்திட்டம் 2001-ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. செய்யுள், உரைநடை, இலக்கணம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளின் கீழ் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. பாடப்பகுதிகளுள் அறஇலக்கியம், காப்பிய இலக்கியம், சிற்றிலக்கியம், சமய இலக்கியம் மற்றும் இக்கால இலக்கியம் போன்ற செய்யுள் பகுதிகள் உள்ளன. ஆறு உரைநடைப்பகுதிகள் – கட்டுரை, கதை, நாடகம், கடிதம், தன்வரலாற்றுக் கட்டுரை ஆகிய வடிவங்களில் வைக்கப்பட்டுள்ளன. இலக்கணப் பகுதிகள் – எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகை இலக்கணங்களையும் உள்ளடக்கி அமைந்துள்ளன.

(ii) பாடப்பகுதியின் மையக்கருத்து, ஆங்கிலத்திலும் அயலக மாணவர்கள் புரிந்து கொள்ள ஏற்றவகையிலும் வைக்கப்பட்டுள்ளது. பாடப்பகுதிகள், எளிமையாக, சுருக்கமாக அயலகச்சூழலில் வாழும் மாணவர்கள் ஆர்வத்துடன் பயில ஏற்றவகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன. துணைப்பாடப்பகுதிகள் தனித்து அளிக்கப்படவில்லை.

(iii) மதிப்பீடு, ஒரு மதிப்பெண்ணை முன்னிறுத்தியே அளிக்கப்பட்டுள்ளது. சரியா? தவறா? கோடிட்ட இடத்தை நிரப்புக, பலவுள் தெரிவு, ஒருவரியில் விடையளிக்க ஆகிய பகுதிகள் மட்டுமே அறிதல் திறனை மதிப்பிடும் வகையில் அளிக்கப்பட்டுள்ளன. மதிப்பீட்டில் மொழித்திறன் பயிற்சிகள் குறித்த விவரங்கள் ஏதும் காணப்படவில்லை.

(iv) செய்யுள் பகுதியில் அளிக்கப்பட்டுள்ள பல்வேறு காலக்கட்டங்களைச் சேர்ந்த இலக்கியங்கள், தமிழின் பல்வேறு பரிமாணங்களையும் அயலக மாணவர்கள் படித்தறிய உதவும்.

(v) உரைநடையின் வாயிலாகப் பல்வேறு உரைவடிவங்களை மாணவர்கள் படிக்கவும் பொருளைப் புரிந்துகொள்ளவும் அவை சார்ந்த வினாக்களுக்கு விடையளிக்கவும் ஏற்றவகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்